பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்த பரிந்துரை அரசுக்கு வந்திருக்கிறது. ஆகவே, அரசு கவனத்தில் எடுத்து, வருகின்ற ஆண்டில் அதை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

**திரு. க.நா. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமாநல்லூரிலுள்ள அரசுப் பள்ளி பெண்களுக்கென்று பொதுவாக உள்ளது. அந்தப் பள்ளியை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி, பெண்களுக்கென்று தனியாக பள்ளிக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள். அந்தப் பள்ளியிலே படிக்கின்ற மாணவியர் எல்லாம் கல்வி கற்கின்ற வகையிலே, அந்தப் பள்ளியை இந்த ஆண்டே மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு இந்த ஆண்டே அது நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**2—**

### நியாய விலைக் கடை

***55009—திரு. பெ. சுப்ரமணி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*2020 செப்டம்பர் 15*]

தருமபுரி தொகுதி, டொக்குபோதனஅள்ளி ஊராட்சி, துர்காளியம்மன் கோயில் கொட்டாய் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேர்த்திமிக்க இச்சபையை, நெருக்கடிமிக்க இந்தக் கொரோனா காலத்திலும் நெறிபிறழா அவையாக, மாட்சிமை மிகுந்த இந்தப் பேரவையை சிறிதும் மாண்பு குறையாது வழிநடத்தும் இச்சபையின் நாயகர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மன்னாதி மன்னன் மகராசி அம்மாவின் பார் போற்றும் கழகத்தின் நல்லாட்சியைத் தந்து மக்களுக்காகப் பாடுபடும் இணையில்லா முதல்வராக, இந்தியாவின் Number One முதல்வராக, (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டுக்கே நல்லாட்சி இயக்கத்தை உயர்த்தவந்த உழவனாக, உலகத் தமிழினமே போற்றும் தமிழனாக சிறப்புற்று விளங்கும் குடிமராமத்து நாயகன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், தாய் ஒப்படைத்த இயக்கத்தைத் தன் உயிராய்க் காக்கின்ற தனையன், மூவர்ணக் கொடி பறக்கும் கழகத்தை, அம்மாவின் வழியில் முக்கடலும் சூழ்ந்த பாரதத்தின் மூன்றாம் பெரும் இயக்கமாக நிலைநாட்ட பாடுபட்டு உழைக்கின்ற பாண்டிய நாட்டுத் தங்கம், பண்பாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்து எனது பதிலுரையைத் துவங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், நல்லபள்ளி வட்டம், பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில், துர்காளியம்மன் கோயில் கொட்டாய் பகுதியில் உள்ள 50 குடும்ப அட்டைகளையும் சேர்த்து 604 குடும்ப அட்டைகளுடன் டொக்குபோதனஅள்ளி முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. துர்காளியம்மன் கோயில் கொட்டாய் மற்றும் அதற்கு அருகாமையில் உள்ள பகுதியைச் சேர்ந்த குடும்ப அட்டைகளுடன் புதிதாக வழங்கப்பட்ட குடும்ப அட்டைகளையும் சேர்த்து 90 குடும்ப அட்டைகளுடன் அம்மா நகரும் நியாய விலைக் கடை துர்காளியம்மன் கோயில் கொட்டாய் பகுதியில் விரைவில் செயல்படத் துவங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2020 செப்டம்பர் 15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.

**திரு. பெ. சுப்ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி, டொக்குபோதனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த துர்காளியம்மன் கோயில் கொட்டாய் பகுதியில் 120 குடும்ப அட்டைகள் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 50 குடும்ப அட்டைகள்தான் உள்ளன என்று சொல்லியிருக்கின்றார்கள். அங்கே 120 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. துறை சார்ந்த அதிகாரிகள் அவருக்கு தவறான தகவலைத் தந்திருக்கின்றார்கள். அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில், அது ஒரு காட்டுப் பகுதி. பஸ் போக்குவரத்து இல்லாத பகுதி. மேலும், மலை சார்ந்த பகுதியாக இருக்கின்றது. அதனால்தான் கடந்த கூட்டத் தொடரில் டொக்குபோதனஅள்ளி ஊராட்சியில் உள்ள துர்காளியம்மன் கோயில், சிவலக்காரன்கொட்டாய் இந்த இரண்டு இடங்களிலும் தலா 120, 150 குடும்ப அட்டைகள் இருக்கின்றன என்று கேள்வி நேரத்தில் நான் தெரிவித்தேன். அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில், அது ஒரு மலை சார்ந்த காட்டுப் பகுதியாக இருக்கின்றது. போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினால்தான் அந்தப் பகுதியில் வாரத்தில் 2 நாட்களாவது பகுதிநேர கடை வேண்டும் என்று கேட்டிருக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நகரும் கடையாகத் தருகிறேன் என்று சொல்லியிருக்கின்றார்கள். இதனைப் பரிசீலனை செய்து, அங்கு இரண்டு நாட்கள் இயங்கும் பகுதி நேர கடையாகத் தருவதற்குண்டான வாய்ப்பினை ஏற்படுத்தித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கடையைப் பொறுத்தவரையில் 50 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அந்த 50 குடும்ப அட்டைகளையும், பக்கத்தில் இருக்கின்ற பகுதியைச் சேர்ந்த குடும்ப அட்டைகளையும் சேர்த்துதான் உறுப்பினர் அவர்கள் சொல்கின்றார். பக்கத்திலுள்ள பகுதியில் ஏறத்தாழ 90 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. பக்கத்தில் இருக்கின்ற பகுதியிலுள்ள கடைகள் மற்றும் பக்கத்து ஊரில் உள்ளவற்றையெல்லாம் சேர்த்து 40 குடும்ப அட்டைகள் என மொத்தம் 90 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. இந்த 90 குடும்ப

*2020 செப்டம்பர் 15]*

அட்டைகளுக்கு ஒரு கடை என்று உருவாக்கியிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏதாவது மாற்றுக் கருத்து இருந்தால் கூறலாம். அந்தக் கடையை ஆரம்பிப்பதற்கு முன்பாக உங்களுடைய கருத்துகள் கேட்கப்படும் என்பதை இந்த நேரத்தில் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் பொது மக்கள் கொடுத்த மனுக்கள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்த மனுக்களின் அடிப்படையில், தருமபுரி தொகுதியில் மட்டும் ஏறத்தாழ 23 அம்மா நகரும் நியாய விலைக் கடைகள் வரவிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்தப் பகுதியில் இருக்கின்ற குடும்ப அட்டைகளைப் பொறுத்து, நகரும் கடைகள் அமையவிருக்கின்ற இடங்கள் குறித்து தெரிவிக்கப்படும். ஒரு நாளைக்கு ஒரு இடத்தில் கொடுப்பார்கள், மற்ற நாட்களில் தாய்க் கடைக்குப் போய் அந்த விற்பனையாளரிடம் வாங்கிக் கொள்ளலாம் என்ற அருமையான இந்தத் திட்டத்தின்மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வரலாற்றுச் சாதனையை இங்கே படைத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1964–ல் கூட்டுறவுத் துறையின் மூலமாக பொது விநியோகத் திட்டத்தின்கீழ் நியாய விலைக் கடைகள் தொடங்கப்பட்டன. 1978–ல் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்கு வருகிறார்கள். அதுவரைக்கும் 4,441 கடைகள் மட்டுமே இருந்தன. அந்தக் கடைகளைப் பார்த்த அன்றைக்கிருந்த முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள், கிராமப்புற மக்களுக்காக கார்டு எண்ணிக்கையைக் கணக்கில்கொள்ளாமல் கிராமத்திற்கு ஒரு கடை என்று சொல்லி, 1984 ஆம் ஆண்டு வரை பல்வேறு கட்டங்களில், அதனை 15,501 கடைகளாக உயர்த்திக் கொடுத்தார். அதற்கடுத்து படிப்படியாக வந்த அரசுகளால் உயர்த்தப்பட்டு தற்போது 32,985 நியாய விலைக் கடைகள் கூட்டுறவுத் துறையால் நிர்வகிக்கப்படுகின்றன. தமிழக வரலாற்றில், ஒரே நேரத்தில் 3,501 நியாய விலைக் கடைகளைக் கொடுத்த ஒரு முதலமைச்சர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் மட்டும் தான் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக பெருமையோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதலாகவே

அங்கே கடைகள் இருக்கின்றன. அந்தக் கடைகளை பல இடங்களில் பிரித்திருக்கிறார்கள். ½ கிலோ மீட்டர்கூட இருக்காது; 30 கார்டுகளுக்காககூட அவருடைய தொகுதியில் ஒரு கடை உள்ளது. தருமபுரி தொகுதியில், அந்த 30 கார்டுகளுக்காக 2½ கிலோ மீட்டர் தூரத்திற்குச் சென்று அங்கிருக்கக்கூடிய மக்களுக்கு நியாய விலைக் கடையின்மூலம் பொருட்களைக் கொடுக்கிறோம். எனவே, ஏதாவது மாற்றுக் கருத்து இருக்கும்பட்சத்தில் துறை ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சுப்ரமணி அவர்கள்.

**திரு. பெ. சுப்ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த எங்கள் கழக ஆட்சியில்கூட, கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் அன்றைய உணவுத் துறை அமைச்சராக இருந்த அன்புக்குரிய அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்கள் சூழ்நிலைக்கேற்றவாறு 50, 60 குடும்ப அட்டைகள் இருந்த இடத்தில் எல்லாம் நியாய விலைக் கடைகளைப் பிரித்துத் தந்தார்கள். அந்தவகையிலேதான் இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றார்கள். அதேபோல, டொக்குபோதனஅள்ளி ஊராட்சியில், சொக்கனேரி, சிவலக்காரன்கொட்டாய் என்கிற இடத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு கட்டடமும் கட்டப்பட்டுள்ளது. அந்த நேரத்தில் துறை சார்ந்த அதிகாரிகள் அந்த இடத்தில் ஒரு நியாய விலைக் கடை வருகிறது, அதற்கு ஒரு கட்டடம் கட்டித் தாருங்கள் என்று சொன்னார்கள். நான் அப்போது ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவராக இருந்தேன். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தாமரைச் செல்வன் அவர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு கட்டடம் கட்டப்பட்டுள்ளது. சிவலக்காரன்கொட்டாய்க்கும், சொக்கனேரிக்கும் கண்டிப்பாக ஒரு நியாய விலைக் கடையை உருவாக்கித் தர வேண்டும். காரணம், அந்தப் பகுதியைப் பொறுத்தவரை, அது ஒரு காட்டுப் பகுதி, மலை சார்ந்த பகுதியாக இருக்கின்ற காரணத்தினால்தான், அந்தப் பகுதியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை தர வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். நேற்றைக்கு இந்தக் கேள்வி வந்தவுடனேயே, துறை சார்ந்த அதிகாரிகள் நகரும் நியாய விலைக் கடையாகத் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். திருப்புலி, சிவலக்காரன்கொட்டாய் அல்லது சொக்கனேரி

*2020 செப்டம்பர் 15]*

பகுதியைப் பொறுத்தவரை, சிவலக்காரன்கொட்டாய்தான் அருகில் இருக்கிறது. அந்த இடத்தில் ஒரு கட்டடத்தைக் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கடந்த கூட்டத்தொடரில் கேள்வி நேரத்தில் தடவம் கிராமத்தில் 1,466 கார்டுகள் இருக்கின்றன, அங்கிருந்து தோக்கம்பட்டிக்கு ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையைப் பிரித்துத் தரும்படி கேட்டிருந்தேன். காரணம், இங்கு தேசிய நெடுஞ்சாலை, நான்கு வழிச்சாலை செல்கிறது; மேலும் சேலத்திலிருந்து பெங்களூரு செல்லும் பழைய சாலையும் இருக்கின்றது. இந்த இரண்டு சாலைகளையும் கடந்துதான் தோக்கம்பட்டி, கக்கஞ்சிபுரம், மேட்டுக்கொட்டாய் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் எங்களுடைய கடைக்கு வருகின்றார்கள். அந்தக் கடையைப் பிரித்துத் தருவோம் என்று 6 மாதத்திற்கு முன்பாகவே அத்துறை சார்ந்த C.S.R., J.R. எல்லாம் சொன்னார்கள். இன்றுவரை அந்தக் கடை துவக்கப்படவில்லை. உடனடியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவரகள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட கட்டடத்தில் கடை திறக்காமல் இருந்தால், அங்கு ஏதாவது சட்டச் சிக்கல் இருக்குமேயொழிய, துறை ரீதியாக கடையைத் திறப்பதற்கான வாய்ப்பு இல்லாமல் இல்லை. நிச்சயமாக, ஒன்று, அந்த நிருவாகம் கொடுக்காமல் இருந்திருக்க வேண்டும், உள்ளாட்சித் துறை கொடுக்காமல் இருந்திருக்க வேண்டும் அல்லது மின் இணைப்பு இல்லாமல் இருந்திருக்க வேண்டும் இதுபோன்ற காரணங்கள் இருந்தாலொழிய, சட்டச் சிக்கல் இருந்தாலொழிய எந்தக் கடையையும் திறக்காமல் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. இதில் எந்த பாரபட்சமும் கிடையாது. இப்போதும்கூட 3,501 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தளவிற்கு ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்றெல்லாம் கிடையாது. மக்களுடைய கோரிக்கைகள், மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலித்துத்தான் இந்தக் கடைகளெல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன.

உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய கொளத்தூர் தொகுதியில் 20 கடைகள் வரவிருக்கின்றன. இதுகுறித்து எங்களுடைய துறை அதிகாரிகள் மூலமாக உங்களை சந்திக்கச் சொல்லியிருக்கிறோம். இந்த இடங்கள் மக்கள் விரும்புகிற இடத்தில் இருக்கிறதா, மக்கள் வாங்குகிற இடத்தில் இருக்கிறதா என்பதை அறிந்து அங்கு கடைகளை அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், இன்னொரு கருத்தையும் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கட்டடம் முழுமையாகக் கட்டப்பட்டிருந்தால், நிருவாகச் சிக்கல் இருந்தால், நிச்சயமாக துறை ரீதியாக அது களையப்பட்டு, கடையைத் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், நெடுஞ்சாலையைக் கடந்து மக்கள் வருகின்றார்கள் என்று உறுப்பினர் கூறினார்கள். உடனடியாக அங்கிருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அவருடைய தனிக் கவனத்தின் மற்றும் அதிகாரத்தின் அடிப்படையில், துறைரீதியாக அந்தக் கடை உடனடியாக பிரித்துக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**3—**

## துணை மின் நிலையம்

***39436—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—